# தமிழ்நாடு அரசு
# நெடுஞ்சாலைத்துறை க(ம)ப கோட்டம்
# அலுவலக காவலர் பணிக்கான விளம்பர அறிவிக்கை

க.எண்.1206/2019/ஆ1, நாள். 15.10.2025

## விளம்பர வேலைவாய்ப்பு அறிவிக்கை

(அரசாணை எண்:44, தொழிலாளர் (ம) வேலைவாய்ப்பு (T2) துறை, நாள்.11.03.2015–இன் கீழ் வெளியிடப்படுகிறது)

**வேலூர் (நெ), க(ம)ப கோட்ட அலகில் காலியாக உள்ள 05 (ஐந்து) அலுவலக காவலர் (ஆதி திராவிடர்–04, பழங்குடியினர்–01) பணியிடத்திற்கு வேலூர் மாவட்டத்தினை இருப்பிடமாகக் கொண்ட தகுதி வாய்ந்த நபர்களிடமிருந்து மட்டும் விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.**

| வ. எண் | காலிப்பணியிடம் | ஒதுக்கீடு விவரம் | தகுதிகள் | | |
|---|---|---|---|---|---|
| 1. | அலுவலக காவலர் | ஆதிதிராவிடர்–04<br>பழங்குடியினர்–01 | 1. | வயது 01.07.2025 அன்று | 18 வயது முதல் 35 வயது வரை |
| | | | 2. | கல்வித் தகுதி | 8–ஆம் வகுப்பு தேர்ச்சி |
| | | | 3. | ஊதிய விகிதம் | ரூ.15,700–58,100 (நிலை–1) |
| | | | 4. | பிற தகுதிகள் | மிதிவண்டி இயக்கும் திறன் பெற்றிருக்க வேண்டும் |

**நிபந்தனைகள்:**

1. விண்ணப்பிக்க விரும்பும் நபர்கள் தனித்தாளில் தங்கள் பெயர், பிறந்த தேதி, வயது, கல்வித் தகுதி, சாதி, இருப்பிட முகவரி மற்றும் பணி அனுபவம் போன்ற சுய விபரங்களை குறிப்பிட்டும் இருப்பிட சான்றிதழ் மற்றும் இரண்டு அரசிதழ் பதிவு பெற்ற அலுவலகர்களிடமிருந்து நாளது தேதியில் பெறப்பட்ட நன்னடத்தை சான்றுகளுடன் இணைத்து விண்ணப்பிக்க வேண்டும். இதற்கென தனியாக விண்ணப்பங்களோ / படிவங்களோ அங்கீகரிக்கப்படவில்லை. உரிய சான்றுகள் இணைக்கப்படாத விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.
2. கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபால் மூலமாகவோ 17.11.2025 பி.ப. 5.45 மணிக்குள் விண்ணப்பங்கள் கிடைக்கப்பெற வேண்டும். காலதாமதமாக கிடைக்கப்பெறும் விண்ணப்பங்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது.
3. விண்ணப்பதாரர்களுக்கு சான்றிதழ் சரிபார்ப்பு மற்றும் நேர்முகத் தேர்வு நடைபெறும் நாள், இடம் ஆகியவை குறித்த விவரங்கள் தனியே கடிதம் மூலமாக (Call Letter) தெரிவிக்கப்படும்.
4. பணியிடங்களுக்கான தகுதியான நபர்கள் நேர்முகத்தேர்வில் பெறும் மதிப்பெண் அடிப்படையில் தேர்வு செய்யப்படுவார்கள்.
5. நேர்முகத் தேர்வில் கலந்து கொள்வதற்கு பயணப்படி எதுவும் வழங்கப்பட மாட்டாது.
6. விண்ணப்பதாரர்கள் சான்றிதழ் சரிபார்ப்பில் அசல் ஆவணங்கள் சமர்ப்பிக்க வேண்டும்.
7. சான்றிதழ் சரிபார்ப்பில் திருப்திகரமான விண்ணப்பதாரர்கள் மட்டுமே நேர்முகத் தேர்வில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

விண்ணப்பங்கள் அனுப்ப வேண்டிய முகவரி:
**கோட்டப் பொறியாளர்,**
நெடுஞ்சாலைத்துறை,
கட்டுமானம் மற்றும் பராமரிப்பு கோட்ட அலுவலகம்,
வெள்ளைக்கல்மேடு, (VIT எதிரில்), வேலூர் – 632 014.

**கோட்டப் பொறியாளர்,**
நெடுஞ்சாலை க(ம)ப,
வேலூர்.

வெ.ஆ.எண்: 93/செ.ம.தொ.அ/வேலூர்/2025, நாள்: 16.10.2025

**"சோதனை கடந்து சுதந்திரம் அடைந்தோம், சாதனை புரிந்து சரித்திரம் படைப்போம்"**